வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல உறுப்பினர்கள் அல்லாதவர்களும், பொது மக்கள் பிரதிநிதிகள் மற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில் நான் தெளிவகாச் சொல்லியிருக்கிறேன். இந்த பஸ் ஸ்டாண்டு கடைகளை வாடகைக்கு விடுகின்றபோது அவர் சொல்வது போல அந்தப் பிரச்சினை இருக்கத்தான் செய்கிறது. அந்தக் கடையை வாடகைக்கு விடுகின்றோம். அதற்கு முன்னாலே கொஞ்சம் இடம் இருக்கிறது என்று சொன்னால், பொது மக்கள் நிற்பதற்கு வசதியாக இருக்கின்ற இடத்தைக் கூட உள் வாடகைக்கு சப்-லீஸுக்கு விட்டுவிடுகிறார்கள். வருமானத்திற்காக. ஆக அப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றபோது அரசின் கவனத்திற்கு வந்தால் அதிலே நடவடிக்கை எடுக்க முடியும். அதிலே அந்த கடைக்காரர் கடை வைத்திருக்கிறாரா அல்லது சப்-லீசுக்கு விட்டிருக்கிறாரா என்பதெல்லாம் இந்த அரசுக்கு தெரியாது. ஏனென்றால், ரெக்கார்டு பூர்வமாக யாரும் சப்-லீசுக்கு விடுவதில்லை. அவர்களாக லோக்கல் அட்ஜஸ்ட்மெண்ட் என்று சொல்வார்களே, அவர்களாகவே செய்துகொள்கின்ற அந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் தான் அப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அது நல்ல யோசனைதான். அனைவரும் ஒத்துழைத்தால் அந்த மாதிரி புகார்கள் இருக்குமானால் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற மாநகராட்சி நிர்வாகத்திற்குத் தெரிவிக்கலாம். நெடுஞ்சாலைத் துறையில் இருக்குமானால் நெடுஞ்சாலைத் துறைக்கு அதைத் தெரிவிக்கலாம். ஆகவே, அப்படிப்பட்ட புகார்கள் வருகின்றபோது உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டும். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 171, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

171—

மேட்டூர் நகரியத்திலுள்ள பாதாளச் சாக்கடைத் திட்டம்.

*9255—திருமதி செ. சுந்தராம்பாள் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அணையில், மேட்டூர் நகரியத்தில் முன்னரே உள்ள பாதாள சாக்கடைத் திட்டம் தற்போது உள்ள மக்கள் தொகை மற்றும் குடியிருப்பு வசதிக்கேற்ப விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

1993 மார்ச் 30]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணையில் மேட்டூர் நகரியத்தில் ஏற்கனவே உள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான திட்டம் ஏதும் தற்பொழுது ஆய்வில் இல்லை. மேட்டூர் நகரியம் ஏற்கனவே உள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற மன்றத் தீர்மானம் இயற்றி ஆய்வுத் தொகையை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டம் ஏதும் இல்லை என்று கூறியுள்ளார்கள். மேட்டூர் நகரியத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டமானது 1944 ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அப்போது மேட்டூர் நகரியம் 4.300 வீடுகள், 13,000 மக்கள் தொகை கொண்டதாக இருந்தது. பொன்னகர் ஆஸ்பத்ரி காலனி, பழைய மார்க்கெட், கூலிலேன் ஆகிய பகுதிகளைச் சேர்த்து ஒரு மெயின் லைன் அமைக்கப்பட்டு ஆஃபீசர்ஸ் குவார்ட்டர்ஸ் மின் வாரிய குடியிருப்பு, தூக்கனாம் பட்டி குவார்ட்டர்ஸ் ஸைட் ஏரியா, வி. பி. அண்டு டி. குவார்ட்டர்ஸ் ஆகிய பகுதிகளில் ஒரு மெயின் லைன் அமைக்கப்பட்டு கழிவுநீர் பண்ணைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. ஆனால் தற்போது மேட்டூர் நகரியத்தில் 9,800 வீடுகளும், 49,891 மக்கள் தொகை கொண்டதாக அமைந்துள்ள காரணத்தால், பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, நகர வளர்ச்சிக்கு ஏற்ப இப் பாதாள சாக்கடைத் திட்டம் வரும் நிதியாண்டிலாவது விரிவு படுத்தப்படுமா என்பதை அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மக்கள் தொகை மற்றும் குடியிருப்பு வசதிக்கேற்ப பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கான ஆய்வுத் தொகை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கட்டப்படுமானால் இதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர், திருப்பூர் மற்றும் பல்வேறு வளர்ந்து வரும் நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டம் என்பது பல்லாண்டுக்காலமாக இருந்துவருகிறது. ஆனால் வளர்ந்து வரும் நகரத்தில் பாதாள சாக்கடை திட்டம் எதிர்காலத்தில் வருகிற சூழ்நிலையில்

அதற்குத் தேவையான நிலத்தை வாங்குவதிலே பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே, திட்டத்தை பின் பகுதியில் கொண்டுவந்தாலும் கூட அதற்கு முன்பாக அந்தத் திட்டத்திற்கான இடங்களை அரசு மூலமாக பெற்று அந்தத் திட்டத்தை அமைப்பதற்கான முன் எச்சரிக்கை நடவடிக்கையில் அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இதுபோன்ற நிலத்தை ஆய்வு செய்வதிலே எந்த எந்த இடங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பது பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடம் என்று சுட்டிக்காட்டினால் அதுபற்றி ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 172, திருமதி ஜீனத் சர்புதீன், இருக்கையில் இல்லை.

வினா எண் 173, திரு. ஆர். ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 174, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

174—

தோட்ட நிறுவனத்தினரின் நலத் திட்டங்கள் பற்றிய அறிக்கை.

*11728 டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தேயிலைத் தோட்டத்திலுள்ள தொழிலாளர்களுக்கு தோட்ட நிறுவனத்தினர் அளித்து வரும் நலத் திட்டங்கள் பற்றிய விபர அறிக்கையை அத்தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு அளிக்குமாறு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நல அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மலைத் தோட்டங்கள் தொழிலாளர் சட்டத்திலோ அல்லது விதிகளிலோ மேற்கூறப்பட்ட அறிக்கைகளை தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்க ஏதும் வரையறுக்கப்பட